# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி,சென்னை–600 032
தொலைபேசி எண்: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in

முன்னிலை : **திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

**ஆணை எண். 232/ந/2024, நாள் 12.09.2025**

திரு. சித. ஆண்டியப்பன்,
காரைக்குடி,சிவகங்கை மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

நகராட்சி ஆணையர்,
சிவகங்கை நகராட்சி,சிவகங்கை மாவட்டம். – எதிர்மனுதாரர்

சிவகங்கை மாவட்டம், காரைக்குடி தாலுகா, நேமத்தான் பட்டி, கிழக்கு தெரு, கார் கூந்தன் ஊரணி, எண்.2/4 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. சித. ஆண்டியப்பன், என்பவரது 29.08.2024 நாளிட்ட புகார் மனு இம்முறைமன்ற நடுவத்தில் 30.08.2024 அன்று பெறப்பட்டு, 232/ந/2024 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

சிவகங்கை மாவட்டம், காரைக்குடி தாலுகா, நேமத்தான் பட்டி, கிழக்கு தெரு, கார் கூந்தன் ஊரணி, எண்.2/4 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. சித.ஆண்டியப்பன், என்பவரது 29.08.2024 நாளிட்ட புகார் மனுவில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:

“எனது மகனின் படிப்பு செலவிற்காகவும், எனது மனைவி மற்றும் எனது மருத்துவ செலவிற்காகவும் சேமநலநிதி கேட்டு சிவகங்கை நகராட்சி ஆணையாளரிடம் மேற்குறிப்பிட்ட பார்வையில் கண்ட நாட்களில் பலமுறை மனு நேரில் கொடுக்கப்பட்டு வழங்காத காரணத்தால் 11.07.2024ல் பதிவு தபால் மூலமாக சிவகங்கை நகராட்சி ஆணையாளர், மதுரை RDMA, சென்னை DMA அவர்களுக்கு மனு அனுப்பப்பட்டும் இதுநாள் வரை வழங்கப்படவில்லை. எனவே சேமநலநிதி ரூ.6,78,700/– மற்றும் அதற்குரிய வட்டி தொகையை பதிவு தபால் மூலமாக கேட்டும் வழங்காத காரணத்தால் அய்யா அவர்கள் தயவு செய்து, கருணை காட்டி எனக்கு சேமநலநிதி மற்றும் வட்டி தொகையை வழங்க உத்தரவிடுமாறு மிகவும் பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்”.

2. மனுதாரது புகார் குறித்து சிவகங்கை நகராட்சி ஆணையரிடம் இம்முறைமன்ற நடுவத்தின் 29.11.2024 நாளிட்ட அறிவிப்பு மூலம் அறிக்கை கோரப்பட்டது.

3. சிவகங்கை நகராட்சி ஆணையர் தனது கடித ந.க.எண்.1281/2023/இ3, நாள் 09.06.2025ன் அறிக்கையில் கீழ்க்கண்ட விவரங்களை தெரிவித்துள்ளார்.

"சிவகங்கை நகராட்சியில் குழாய் பொருத்துநராக பணிபுரிந்து பணிமாறுதலில் குழாய் பொருத்துநர் (நிலை–1) ஆக சென்றுள்ள திரு. சித. ஆண்டியப்பன், சிவகங்கை நகராட்சியில் பணிபுரிந்த காலங்களில் தனியரது ஊதியத்தில் பிடித்தம் செய்யப்பட்ட சேமநலநிதித் தொகை கணக்கு முடிக்கப்பட்டு இருப்பில் உள்ள தொகை ரூ.6,78,705/– (ரூபாய் ஆறு இலட்சத்தி எழுபத்து எட்டாயிரத்து எழுநூற்றி ஐந்து) மட்டும் துறையூர் நகராட்சி ஆணையாளர் அலுவலக வங்கி கணக்கு எண்.11179316639 SBI No.0000765 பாரத மாநில வங்கி கணக்கில் 27.05.2025ல் வரவு வைக்கப்பட்டது தொகை ரூ.6,78,705/– வங்கி கணக்கில் வரவு வைக்கப்பட்ட விவரம் சிவகங்கை நகராட்சி ஆணையாளர் கடிதம் மூலம் துறையூர் நகராட்சி ஆணையாளருக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. அதன் விவரம் புகார்தாரராகிய திரு. சித. ஆண்டியப்பன் அவர்களுக்கு கடித நகல் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது என்ற விவரம் பணிவுடன் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது" என தெரிவித்துள்ளார்.

4) மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரான சிவகங்கை நகராட்சி ஆணையர் ஆகியோர் 11.06.2025அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 04.06.2025 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5) மனுதாரர் திரு. சித.ஆண்டியப்பன் என்பவர் 11.06.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் தனது வாக்குமூலத்தை கீழ்க்கண்டவாறு அளித்துள்ளார்:-

"நான் சிவகங்கை நகராட்சியில் குழாய் பொருத்துநராக பணிபுரிந்த காலத்தில் எனது ஊதியத்தில் சேமநல நிதிக்காக பிடித்தம் செய்த ரூ.6,78,700/– (ரூபாய் ஆறு லட்சத்து எழுபத்தெட்டாயிரத்து எழுநூறு மட்டும்) லிருந்து ரூ.5,00,000/– (ரூபாய் ஐந்து லட்சம் மட்டும்) கடனாக எனது மருத்துவ செலவிற்காகவும், எனது மகனின் படிப்பு செலவிற்காகவும் வழங்கக்கோரி சிவகங்கை நகராட்சி ஆணையாளரிடம் பலமுறை நேரிலும், பதிவஞ்சலிலும் மனு கொடுத்திருந்தும் எனக்கு சேரவேண்டிய சேமநலநிதி மற்றும் வட்டித் தொகை கிடைக்காததால் அதனைப் பெற்றுத்தரக் கோரி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் அவர்களை கேட்டிருந்தேன்.

தற்போது நான் துறையூர் நகராட்சியில் பணிபுரிந்து வருகின்றேன். சிவகங்கை நகராட்சியில் பிடித்தம் செய்யப்பட்ட சேமநலநிதி துறையூர் நகராட்சிக்கு வந்தது குறித்து துறையூர் நகராட்சி அலுவலகத்தில் C1 கிளார்க்காக பணிபுரிபவரிடம் கேட்டபோது எனது சேமநலநிதி துறையூர் நகராட்சி அலுவலகத்திற்கு வந்துவிட்டது எனத் தெரிவித்தார். ஆனால் அதற்கான வட்டித்தொகை இதுநாள்வரை பெறப்படவில்லை. எனவே, சிவகங்கை நகராட்சியில் பிடித்தம் செய்த சேமநல நிதிக்கான வட்டித்தொகையினை பெற்று வழங்க ஆவன செய்யுமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்'' எனத் தெரிவித்துள்ளார்.

6) எதிர் மனுதாரராகிய சிவகங்கை நகராட்சி ஆணையர் சார்பாக சிவகங்கை நகராட்சியில் கணக்கராகப் பணிபுரியும் திரு. சொ.தியாகராஜன் என்பவர் 11.06.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் தனது வாக்குமூலத்தை அளித்துள்ளார்:-

"திரு. சித. ஆண்டியப்பன் அவர்கள் சிவகங்கை நகராட்சியில் குழாய் பொருத்துநகராகப் பணிபுரிந்து வந்த காலங்களில் அவரது ஊதியத்தில் பிடித்தம் செய்த சேமநல நிதிக்கணக்கு முடிக்கப்பட்டு ரூ.6,78,705/–(ரூபாய் ஆறு லட்சத்து எழுத்தெட்டாயிரத்து எழுநூற்றி ஐந்து மட்டும்) துறையூர் நகராட்சி வங்கிக் கணக்கில் 27.05.2025–ல் வரவு வைக்கப்பட்டு விட்டது.

மேற்படித் தொகைக்கான வட்டித் தொகை உள்ளாட்சி தணிக்கைத்துறையில் இருந்து வழங்க வேண்டும் என்பதால் அதற்கான முன்மொழிவினை உள்ளாட்சி தணிக்கைத் துறைக்கு அனுப்பி வைக்க சிவகங்கை நகராட்சியால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

சிவகங்கை நகராட்சியில் 2019 முதல் போதிய நிதி இல்லாததால் இந்த தாமதம் ஏற்பட்டது. எதிர்வரும் காலங்களில் இத்தகைய தாமதம் ஏற்படாமல் இருக்க நகராட்சியால் ஆவன செய்யப்படும் என்ற விவரத்தினை பணிவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்" என தெரிவித்துள்ளார்.

7) மனுதாரரின் புகார் மனு, அதனுடன் பெறப்பட்ட ஆவணங்கள், மனுதாரர் அளித்த வாக்குமூலம், சிவகங்கை நகராட்சி ஆணையரின் அறிக்கை, ஆணையர் சார்பாக விசாரணைக்கு ஆஜரான நகராட்சி கணக்கரின் வாக்குமூலம் மற்றும் தொடர்புடைய ஆவணங்கள் அனைத்தும் இம்முறைமன்ற நடுவத்தினால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:-

மனுதாரர் தனது மகனின் படிப்பு செலவிற்காகவும், தனது மனைவி மற்றும் தனது மருத்துவச் செலவிற்காகவும் சேமநலநிதி கேட்டு சிவகங்கை நகராட்சி ஆணையரிடம் பல முறை நேரில் மனு கொடுக்கப்பட்டும், வழங்காத காரணத்தினால் சேமநலநிதி தொகை ரூ.6,78,700/– மற்றும் அதற்குரிய வட்டித்தொகையை வழங்க இம்முறைமன்ற நடுவத்தை கோரியிருப்பதும், பின்னர் பிடித்தம் செய்யப்பட்ட சேமநலநிதி மட்டும் துறையூர் நகராட்சியில் பெறப்பட்டுவிட்டது என்றும், ஆனால் அதற்கான வட்டித்தொகை பெறப்படவில்லை என்ற விவரம் மனுதாரரின் மனு மற்றும் வாக்குமூலத்தில் இருந்து அறிய முடிகிறது.

சிவகங்கை நகராட்சியில் குழாய் பொருத்துநராக பணிபுரிந்து பணி மாறுதலில் குழாய் பொருத்துநர் (நிலை–1) ஆக துறையூர் நகராட்சிக்கு சென்றுள்ள மனுதாரர் சிவகங்கை நகராட்சியில் பணிபுரிந்த காலங்களில் அவரது ஊதியத்தில் பிடித்தம் செய்யப்பட்ட சேமநல நிதித்தொகை கணக்கு முடிக்கப்பட்டு இருப்பில் உள்ள தொகை ரூ.6,78,705/– (ரூபாய் ஆறு இலட்சத்தி எழுபத்தி எட்டாயிரத்து ஏழுநூற்றி ஐந்து மட்டும்) துறையூர் நகராட்சி ஆணையாளர் அலுவலக வங்கி கணக்கு எண்.11179316639 SBI No.0000765 பாரத மாநில வங்கி கணக்கில் 27.05.2025–ல் வரவு வைக்கப்பட்டு அதன் விவரம் துறையூர் நகராட்சி ஆணையர் மற்றும் மனுதாரருக்கு தெரிவிக்கப்பட்டது என்பதும் மனுதாரரின் சேமநலநிதித்தொகைக்கான வட்டித்தொகை உள்ளாட்சி தணிக்கைத்துறையில் இருந்து வழங்க வேண்டும் என்பதால் அதற்கான முன்மொழிவினை உள்ளாட்சி தணிக்கைத்துறைக்கு அனுப்பி வைக்க சிவகங்கை நகராட்சியால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதையும் சிவகங்கை நகராட்சியில் 2019 முதல் போதிய நிதி இல்லாததால் இந்த தாமதம் ஏற்பட்டது என்பதும், எதிர்வரும் காலங்களில் இத்தகைய

தாமதம் ஏற்படாமல் இருக்க நகராட்சியால் ஆவன செய்யப்படும் எனவும் நகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் நகராட்சி கணக்கரின் வாக்குமூலத்திலிருந்து அறிய முடிகிறது.

இந்நேர்வில் சிவகங்கை நகராட்சி ஆணையரின் அறிக்கை, மற்றும் சிவகங்கை நகராட்சி கணக்கரின் வாக்குமூலத்தை ஏற்று, மனுதாரருக்கு விதிமுறைகளுக்கு உட்பட்டு சேர வேண்டிய சேமநலநிதி வட்டித்தொகையினை மூன்று மாத காலங்களுக்குள் உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையிடமிருந்து பெற்று வழங்க உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு சிவகங்கை நகராட்சி ஆணையரை அறிவுறுத்தலாம் என முடிவு செய்து அவ்வாறே இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2025–ஆம் ஆண்டு, செப்டம்பர் திங்கள் 12–ம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு. சித.ஆண்டியப்பன்,
2/4, கார்கூந்தன் ஊரணி கிழக்கு தெரு,
நேமத்தான்பட்டி, காரைக்குடி தாலுகா,
சிவகங்கை மாவட்டம்.

2) நகராட்சி ஆணையர்,
சிவகங்கை நகராட்சி,
சிவகங்கை மாவட்டம்.

3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.

4) ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.

நகல்: மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்

இ.கோ/உதிரி

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

15/9/25
செயலாளர்